[1983 ஜனவரி 31

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான கால்கோள் விழா நடந்து இப்போது திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பாண்டலம் ஏரியிலுள்ள மதகுகள்

வினா எண். 74— திரு. சோ. கலித்தீர்த்தான்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டலம் ஏரியில் உள்ள 2 பெரிய மதகுகள் பழுதாகி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்

(ஆ) இதற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவிற்கு முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. சோ. கலிதீர்த்தான்: தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நன்றி. இரண்டு மதகுகளில் ஒரு மதகின் பணி முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் ஒரு மதகு சீர் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் சுமார் 350 ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யமுடியாமல் இருக்கின்றன. அந்த பணியை இந்த ஆண்டிலேயே செய்து முடிக்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே. இன்னு இரண்டு, மூன்று மாதங்களில் அந்தப்பணியை முடித்து விடலாம் என்று அரசு கருதுகிறது.

உடைந்துப் போன ஆற்றங்கரைப்பட்டி ஆணையினை மீண்டும் கட்டும் திட்டம்

வினா எண். 75 திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையாற்றில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது உடைந்து போன ஆத்தங்கரைப் பட்டி அணையினை திப்பரவு என்னுமிடத்தில் மீண்டும் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?